## சிந்தனையைத் தூண்டிய திராவிட எழுத்துகள்!

# கலைஞரின் ‘கயிற்றில் தொங்கிய கணபதி’!

**யா**ர் அந்த கணபதி? கலைஞரின் நண்பரா? உறவினரா? ஆம்..உறவினர்தான். உலகெங்கு வாழும் தமிழர்கள் அனைவருமே அவரது உறவினர்தான்.. உடன்பிறப்புகள்தான்.




கணபதி மலேயா நாட்டில் வாழ்ந்த உரிமைப் போராளி. மலேசியா – சிங்கப்பூர் இரண்டும் ஒரே நாடாக மலேயாவாக, பிரிட்டிஷாரின் ஆட்சியின் கீழ் இருந்த போது தொழிலாளர்களின் உரிமைக்காக அந்த நாட்டு அரசாங்கத்தை எதிர்த்துப் போராடியவர்தான் மலேயா கணபதி. பெயரில், மலேயா இருந்தாலும் அவர், தமிழ்நாட்டின் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்.

தமிழகத்திலிருந்து பல பேர் தொழிலாளர்களாக இலங்கைக்கும் மலேயாவுக்கும் வெள்ளைக்காரர்கள் ஆட்சிக்காலத்தில் சென்றனர். அங்கேயே வாழ்ந்தனர். குடும்பம், குழந்தைகள் என அங்கேயே வாழக் கூடிய சூழலுக்கு ஆளாயினர். மலேயாவில் இருந்த எஸ்டேட்டுகளில் வேலை பார்த்த தொழிலாளர்களின் உரிமைக்காகப் போராடியவர் கணபதி. அதற்காக அப்போது மலேயாவை ஆண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் அவருக்குத் தந்த பரிசு, தூக்குத் தண்டனை.

அவரது உரிமைப் போராட்டத்தின் நியாயத்தை உலகளாவிய தொழிலாளர் வர்க்கம் மலேயா அரசிடம் எடுத்துரைத்தது. எப்போதும் உழைக்கும் மக்கள் பக்கம் நிற்கும் இயக்கமான திராவிட இயக்கமும், கணபதியை விடுதலை செய்யக் கோரியது. இந்தியாவின் பிரதமராக இருந்த நேருவிடம் முறையிடப்பட்டது. வெளியுறவுக் கொள்கைகள் காரணமாக இந்திய அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்க முடியவில்லை. கணபதி தூக்கிலிடப்பட்டார். அந்தக் கொடுமை தாங்காமல் கலைஞர் ஒரு கட்டுரை எழுதினார்.

1949ஆம் ஆண்டு ஜூலை மாதம், தி.க.விலிருந்து தி.மு.க. பிரியாத காலத்தில் கலைஞர் எழுதிய கட்டுரையின் தலைப்புதான் ‘கயிற்றில் தொங்கிய கணபதி’. தமிழ்நாட்டை, அதுவும் தன்னுடைய தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞனின் உயிரைக் காப்பாற்ற முடியாமல் போன வேதனையில் அவர் எழுதிய கட்டுரை, தனிப் புத்தகமாகவும் வெளியானது.

**“இருபத்தி நான்கு வயது இளைஞன், எழில்நிறை தமிழன், கணபதி கயிற்றிலே தொங்க நேரிட்டது. கதியற்றவராய் – காப்பாற்ற நாதியற்றவராய் ஏன்?” கலைஞரின் இந்தக் கேள்வியில் நியாயம் உண்டு. அத்துடன், கலைஞருக்கும் அப்போது ஏறத்தாழ அதே வயதுதான். தன் வயதை நிகர்த்த ஓர் இளைஞன், அதுவும் தன்னைப் போல போராட்டக் குணமுள்ள இளைஞன், மலேயா நாட்டில் ஆங்கிலேய ஆதிக்கத்தால் தூக்கிலிடப்பட்டதைக் கலைஞரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதன் விளைவே, அந்தக் கட்டுரையும், அதன் தொகுப்பான சிறு நூலும்.**

‘கணபதி தூக்கிலிடப்படுவார்’ இச்செய்தி, திராவிடத்தை ஏன், உலகத்தையே எட்டிய நேரத்தில் திராவிடம் சோர்ந்து வீழ்ந்தது. அதே வேளையில், ஆறுதல் சிறிது தலைக்காட்டியது. சுதந்திர பூமியில் சுதந்திர வீரர்களாய் சுதந்திரத் தலைவர்களைப் பெற்றிருக்கிற நமக்கு ஏன் வீண் சஞ்சலம்? நமது சர்க்கார், நமது நாட்டுக் கணபதியை அநாதையாக மலேயாவில் மாளவிடாது என மனத்தைத் திடப்படுத்திக் கொண்டோம். அது மட்டுமல்ல, காமன்வெல்த்தோடு ஏற்படும் உறவு, கணபதியைக் காப்பாற்றும் என நம்பி, கண்ணீரைத் துடைத்துக் கொண்டோம். துடைத்த கையை எடுக்கவில்லை. தூக்கு மேடை கணபதியைத் தின்று ஏப்பமிட்ட சப்தம் நமக்குக் கேட்டுவிட்டது.

உலகில் எத்தனையோ பேர் தினம் தினம் சாகிறார்கள். எல்லா வற்றுக்குமா எல்லோரும் கவலைப்படுகிறோம்? அதுபோலவே, எத்தனையோ பேர் தூக்கிலிடப் படுகிறார்கள். ஆனால், கணபதியின் தண்டனை தமிழ்நாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. கணபதியே ஒரு பாடமாகிவிடுகிறார் தமிழ்நாட்டுக்கு.

அவர் வாழ்வே தமிழர்க்கு ஒரு அரசியல் வகுப்பு. அவரது இறுதிக் கடிதம் தமிழ்ப் பட்டாளத்துக்கு ஒரு போர்ப் பிரகடனம்.

– என்று அந்தக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ள கலைஞர், தனக்கு ஆட்சி செய்யும் வாய்ப்பு அமைந்த போது, புலவர் கலியபெருமாள், தோழர் தியாகு ஆகியோரின் மரண தண்டனையை ரத்து செய்வதற்கு சட்டரீதியாகத் துணை நின்றார்.

ஈராக் அதிபர் சதாம் உசேன் அமெரிக்க சதியால் தூக்கிடலிடப் பட்டபோது, மரண தண்டனைக்கு எதிராகக் குரல் கொடுத்தவர் கலைஞர். அவருடைய படைப்புகள் மானுடத்தின் விடுலைக் குரல்.

## திராவிட முன்னேற்றம்...

101 அடி உயர மெட்ரோ ரயில் உயர்மட்ட மேம்பாலத்தில் நின்று பார்வையிட்டு பிரமித்த முதலமைச்சர் விஜய்...



திரும்பும் திசையாவும் தி.மு.க. கொண்டு வந்து சேர்த்த திட்டங்கள்..

“மெட்ரோ ரயில்” உட்பட..

என்னநாஞ் சொல்றது



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

# எத்தனால் பெட்ரோலுக்கு தடை கோரி போராட்டம்!

புதுடெல்லி, ஆக. 3 –

ஒன்றிய அரசின் கட்டாய எத்தனால் கலந்த பெட்ரோல் கொள்கையால் வாகனங்களின் மைலேஜ் குறைவதாகவும், என்ஜின்கள் பாதிக்கப்படுவதாகவும் குற்றச் சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இதனை எதிர்த்து ”டீம் பாரத் அமைப்பு சார்பில் ஜூலை 31 அன்று டெல்லியில் வாகனப் பேரணி நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. டெல்லி இந்தியா கேட் முதல் நாடாளுமன்ற வீதி வரை நடத்தவிருந்த வாகனப் பேரணிக்கு டெல்லி போலீசார் அனுமதி மறுத்தனர். பேரணியைத் தொடர்ந்தால் வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும், பங்கேற்பாளர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் போலீசார் எச்சரித்தனர்.

போராட்டம் தொடங்குவதற்கு முன்பே ஜூலை 30ம் டெக்சீன் பூனாவாலா போலீசாரால் கைது செய்யப் பட்டார். மேலும், அவருடைய இன்ஸ்டாகிராம் பக்கமும் முடக்கப்பட்டது. அரசின் இந்த நடவடிக்கையைத் தொடர்ந்து வாகனப் பேரணி தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில், டெக்சீன் பூனாவாலா வீட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# காவிரி நீரை உடனடியாக தமிழ்நாட்டிற்கு திறந்துவிட உச்சநீதிமன்றத்தில் தி.மு.க. அவசர மனு!

## மூத்த வழக்கறிஞர் பி. வில்சனால் இம்மனுக்கள் வரைவு செய்யப்பட்டு இறுதி செய்யப்பட்டுள்ளது!

சென்னை, ஆக. 3-

திராவிட முன்னேற்றக் கழகம் விவசாயிகள் அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அவர்கள் மூலம், சிவில் மேல்முறையீட்டு வழக்கு எண்2453/2007ல் இடைக்கால மனுவைத் தாக்கல் செய்து, தமிழ்நாட்டிற்கு காவிரி நீரை உடனடியாக திறந்துவிட அவசர உத்தரவு பிறப்பிக்கவும், 16.02.2018 அன்றுஉச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பைநடைமுறைப்படுத்தவும், காவிரி நீர் ஒழுங்குமுறை குழு(CWRC) மற்றும் காவிரி நீர் மேலாண்மை ஆணையம்(CWMA) வழங்கிய உத்தரவுகளை அமல்படுத்தவும் உச்சநீதிமன்றத்தை அணுகியுள்ளது.

இம்மனுக்கள்மூத்தவழக்கறிஞர் பி.வில்சனால் வரைவு செய்யப்பட்டு இறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவில் உச்சநீதிமன்றத்திடம்பின்வரும் நிவாரணங்கள் கோரப்பட்டுள்ளன:

I. 28.07.2026 அன்று காவிரி நீர் ஒழுங்குமுறை குழு(CWRC) வழங்கியதும், 30.07.2026 அன்று காவிரிநீர் மேலாண்மை ஆணையம் (CWMA) உறுதிசெய்தது மான உத்தரவை கர்நாடக அரசு உடனடியாக முழுமையாக செயல்படுத்துமாறுஉத்தரவிட வேண்டும். அதன்படி, மாண்புமிகுஉச்சநீதிமன்றத்தின் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்து 15 நாட்களுக்கு தினமும்3,500 கனஅடி (கியூசெக்ஸ்) தண்ணீர்பிலிகுண்டுலுவில் திறந்துவிடவும், 29.07.2026 முதல்ஏற்பட்டுள்ள பற்றாக்குறையையும் ஈடு செய்யுமாறுஉத்தரவிட வேண்டும்.

II. 26.07.2026 நிலவரப்படி, விகிதாச்சார (Distress Sharing) அடிப்படையில் தமிழ்நாட்டிற்குவழங்கப் படவேண்டிய 9.46 டி.எம்.சி. நீர்பற்றாக்குறையை ஈடு செய்யும் வகையில், 15 நாட்களுக்கு தினமும் சுமார் 7,000 கியூசெக்ஸ்தண்ணீர் பிலிகுண்டுலுவில் கிடைக்குமாறு கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டும்.

III. கர்நாடக அணைகளிலிருந்து திறக்கப்படும்நீரையும், பிலிகுண்டுலுவில் கிடைக்கும் நீரின்அளவையும் காவிரி நீர் மேலாண்மை ஆணையம்(CWMA) தினசரி கண்காணித்து, அதன் அமலாக்கநிலையை மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில்அறிக்கையாக தாக்கல் செய்யுமாறு உத்தரவிடவேண்டும்.

IV. வழக்கின் உண்மை நிலைகள் மற்றும்சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, நீதியை நிலைநாட்டுவதற்குத் தேவையான பிற உரியஉத்தரவுகளையும் மாண்புமிகு உச்சநீதிமன்றம்பிறப்பிக்க வேண்டும்.

கர்நாடக அரசு, காவிரி நீர் மேலாண்மை திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள சட்டப்பூர்வ அமைப்புகளின்கட்டாய உத்தரவுகளைப் பின்பற்றாமல் காவிரி நீரைதிறந்துவிட மறுத்துள்ளதால், காவிரி டெல்டாபகுதியைச் சேர்ந்த இலட்சக் கணக்கான விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை இந்த மனுசுட்டிக்காட்டுகிறது. விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும், உச்சநீதிமன்றத்தின் 16.02.2018 தீர்ப்பை முழுமையாக அமல்படுத்தவும், உடனடிதலையீடு செய்யுமாறு உச்சநீதிமன்றத்திடம் இம்மனு கோருகிறது.

மேற்கூறிய மேல்முறையீட்டில் திராவிட முன்னேற்ற கழகத்தையும் , காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தையும் (CWMA) ஒரு தரப்பினராக இணைத்துக்கொள்ளுமாறும் தி.மு.க. கோரியுள்ளது.

## காவிரிநீர் – மேகதாது சார்ந்த எந்த விவாதமும் செய்யாமல்

# எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்குவதிலேயே காலத்தைக் கடத்திவிட்டீர்களே CM SIR!

## வலைதளப்பதிவில் – சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு. அப்பாவு கண்டனம்!

*நெல்லை.ஆக.3-*

*சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு. அப்பாவு விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:*

*தலைவர் கலைஞர் அவர்களும், தமிழக அரசியல் தலைவர்களும் 28 ஆண்டுகள் போராடி காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தை பெற்றுத் தந்தனர்.குறித்த காலத்தில் காவிரி நீர் பெற அனைத்து கட்சி கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களும் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டா லின் உட்பட அனைத்து அரசியல் கட்சி தலைவர்களும் முதல்வரிடம் கோரிக்கை வைத்தும், அதனை மதிக்காமல் ஆணவத்தின் உச்சத்திற்கே சென்று விட்டீர்களே CMsir?*

*இரண்டு மாதத்திற்கு முன்னரே உச்சநீதிமன்றம் சென்று காவிரி நீர் பெறுவதற்கு பதிலாக தான்தோன்றித் தனமாக நானே கர்நாடக முதல்வரை சந்தித்து தண்ணீரைக் கொண்டு வருவேன் என்ற அகந்தையால், நீங்கள் அவமானப் பட்டதோடு தமிழகத்தையும் அவமானப்படுத்தி விட்டீர்களே CMsir?*



*காவிரிப் படுகையில் உங்கள் நண்பன் ஜனார்த்தன ரெட்டிக்கு மணல் எடுப்பதற்காக காவிரி படுகையையே காய வைத்து விட்டீர்களா CMsir?*

*நீர்வளத்துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளிடம் காவிரி நீர் மற்றும் மேகதாது சார்ந்த ஆக்கப்பூர்வமான எந்த விவாதமும் செய்யாமல்,ஆட்சியை தக்க வைக்க எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்குவதிலேயே காலத்தை கடத்தி விட்டீர்களே CMsir?*

*தமிழக,கர்நாடகா முதல்வர்களின் காலம் தாழ்ந்த சந்திப்பு நடத்தியிருந்தாலும், காவிரி நீர் பெறுவதற்கான சந்திப்பாக அல்லாமல்,தனது நண்பரும், டெல்லி தமிழக அரசு பிரதிநிதியும், ஜனநாயக பட தயாரிப்பாளரும்,கர்நாடக முதல்வரின் நெருங்கிய நண்பருமான பெங்களூர் வெங்கட் நாராயணாவின் தொழில் சார்ந்த சந்திப்பாகத்தான் இருந்திருக்கும் என்று சந்தி சிரிக்கிறது CMsir?*

*இவ்வாறு முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு சமூக வலைதளத்தில் கூறியுள்ளார்.*

## மாதவரத்தில் கே.பூலோகம் படத்திறப்பு!

*மாதவரம், ஆக. 3-*

*சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி 17 வது வட்டம் கொசப்பூர் கிளைக் கழகத்தின் மூத்த முன்னோடி நினைவில் வாழும் குப்புரங்கம் அவர்களின் துணைவியாரும், கே.கண்ணன், கே. சிவானந்தம், கே. கோவிந்தராஜ் ஆகியோரின் தாயாரும், கழகத்தின் மகளிர் அணி வீராங்கனை கழக முன்னாடி கே. பூலோகம் அவர்கள் 15நாட்களுக்கு முன் இயற்கை எய்தினார்.*

*இயற்கை எய்திய கழக செயல்வீரர் கே. பூலோகம் அவர்களின் திருவுருவப் பட திறப்பு நிகழ்ச்சி கொசப்பூர் பெருமாள் கோவில் தெருவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது. மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் கலந்து கொண்டு பூலோகம் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தி அவரது குடும்பத்தினருக்கு ஆறுதலை தெரிவித்துக் கொண்டார்.*

## தி.மு.க. ஆட்சியில் விவசாயிகள் மகிழ்ச்சியில் திளைத்தார்கள்!

# த.வெ.க. ஆட்சியில் காவிரி ஆறு முற்றிலும் வறண்டு பாலைவனம் போல் காட்சியளிக்கிறது!

## தி.மு.க. ஐ.டி.விங் விமர்சனம்!








சென்னை, ஆக 3-

திமுக ஆட்சிக் காலத்தில் காவிரியில் செழுமையாகத் தண்ணீர் பாய்ந்து, விவசாயத்தின் மேன்மையால் தமிழ்நாட்டின் விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சியில் திளைத்திருந்தனர்.

ஆனால், நிர்வாகத் திறனற்ற தவெக அரசுப் பொறுப்பேற்ற பிறகு, அவர்களிடம் முறையான தொலைநோக்குப் பார்வையும் இல்லை, அண்டை மாநிலத்துடன் சுமுகமாகப் பேசி, நம் மாநிலத்தின் உரிமையான தண்ணீரைப் பெற்றுத் தரும் திறமையும் வக்கும் இல்லை. இதன் காரணமாகவே இன்றைக்குக் காவிரி ஆறு முற்றிலும் வறண்டு, பாலைவனம் போல் காட்சியளிக்கிறது என்று தி.மு.க. ஐ.டி.விங் தெரிவித்துள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.வி. நடராசன்
### ஆகஸ்ட் 3 (1975)



சென்னை மாவட்டக் கழகத்தின் முதலாம் செயலாளர். கழகச் சட்டதிட்டங்களை உருவாக்குவதற்கு அமைக்கப்பட்ட சட்டதிட்டத் திருத்தக்குழுவின் முதல் செயலாளர், கழகத்தின் முதல் அமைப்புச் செயலாளர் மற்றும் தி.மு.கழகத்தில் மிக நீண்டகாலம் தலைமை நிலையச் செயலாளராக இருந்தவர் என்ற பெருமைக்குரியவர்.

அதுமட்டுமல்லாமல், கலைஞர் அவர்கள் முதல்வர் பொறுப்பேற்ற பிறகு, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் புதுமை என்ற புகழ் பெற்ற ‘பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை’ அமைந்தபோது, அதன் அமைச்சராக முதலில் பதவி வகித்தவரும் இவர்தான்.

‘திராவிடன்’ என்ற இதழை துவக்கி கழகத்தின் போர்முரசமாய் அதை நடத்தி வந்தார்.

இந்தி எதிர்ப்பு, விலைவாசி உயர்வு உள்ளிட்ட பல அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் “நமது தி.மு.கழக மாலடோவ் என்.வி.என்” என பெருமைப்படக்கூறியது குறிப்பிடத்தக்கது.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**